Tiaano® Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2008 Certified

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS


- **Customers…**
  - Up to Oct. 14 : 798 Nos.
  - Up to Sep. 14 : 787 Nos.
- **Performance Oct. 14 …**
  - Turnover growth : 1.83%
  - Employment growth : 0%
  - 100% Attendance : 13.88%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- Hydro Gen Go Green – HHO Generators
- Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## பொறுமை

நகரிலேயே மிகப்பெரிய ஓட்டல் அது, ஒரு பணக்காரர் தனது ஆடம்பரக்காரில் வந்து இறங்கினார். அந்த ஓட்டலின் பல நாள் வாடிக்கையாளர் அவர். ஓட்டல் பணியாளர் அவரிடம் மெனு கார்டை நீட்டி, என்ன வேண்டுமென 'டிக்' செய்யச் சொன்னார்.

காய்கறி சூப், ப்ரூட் சாலட், நூடுல்ஸ், மஷ்ரூம் பிரியாணி என்ற பட்டியல் நீண்டது. அந்த நபருக்கு ப்ரூட் சாலட் சாப்பிட ஆசை. ஆனால், தவறுதலாக காய்கறி சாலட்டை டிக் செய்துவிட்டார். பத்தே நிமிடங்களில் பணியாளர் அவர் முன்னால் காய்கறி சாலட்டை வைத்தார். அவ்வளவுதான்! கொதித்தெழுந்து விட்டார் அந்த நபர்.

நான் இதையா கேட்டேன், ப்ரூட் சாலட் அல்லவா கேட்டிருந்தேன், என் நேரத்தை வீணடிக்கிறீர்களே! "என சத்தம் போடவும், முதலாளியே ஓடி வந்துவிட்டார். பணியாளர் நினைத்திருந்தால், மெனுகார்டில் அவர் 'டிக்' செய்ததைக் காட்டியிருக்கலாம். ஆனால், அவர் மிகுந்த பொறுமையுடன் "மன்னிக்க வேண்டும் ஐயா, தவறு நடந்திருக்கலாம். நான் ப்ரூட் சாலட்டை ஐந்தே நிமிடங்களில் கொண்டு வருகிறேன்" என்று உள்ளே சென்றார். ப்ரூட் சாலட் வந்தது.

சாப்பிடும்போது தான் அந்த நபருக்கு சந்தேகம் வந்தது. பணியாளரிடம், "நான் டிக் செய்த மெனுகார்டைக் கொண்டு வாருங்கள்" என்றார் பணியாளர் கொண்டு வந்தார். திருப்பிப் பார்த்த அவருக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

பணியாளரை அழைத்து அவரது முதலாளி முன்னிலையிலேயே மன்னிப்பு கேட்டார். காய்கறி சாலட்டிற்கும் சேர்த்து பணத்தை செலுத்தினார். முதலாளி அந்த நற்பணியாளரின் பொறுமையையும் கடமையுணர்வையும் பாராட்டி சம்பள உயர்வளித்தார்.

அந்த நபர்தான் தவறு செய்தார் என்று பணியாளர் வாக்குவாதம் செய்திருந்தால் அது வீண் பிரச்சனையை வளர்த்திருக்கும். அவரது பொறுமை அவருக்கு பெருமை தந்தது. அந்த நபர் தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டதன் மூலம் மனிதத் தன்மையை நிரூபித்து விட்டார். பிறரது தவறுகளை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். ஆகவே எந்த சூழ்நிலையிலும் பொறுமையாக இருக்க கற்றுக்கொள்ளுங்கள்!

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## மனித மனம்

மனித இதயங்கள் இருக்கும் இடங்களால் வேறுபட்டாலும் இயக்கங்களால் ஒன்றுபடுகின்றன!

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதால் மட்டுமே மனித மனம் வெற்றி கொள்கிறது!

மனித மனங்கள் ஒவ்வொன்றும் புனிதமானது என்பதை ஒவ்வொருவரின் மனமும் மனதார உணர்ந்துகொள்ளும் போது இப்பூவுலகம் அனைத்தும் பொன்னுலகமாய் நிறம் மாறும்!

Compiled By : Miss. P. Nirmala Devi
Finance

## FUNCTIONAL WISHES





**Thirukarthigai**
**05th DECEMBER**

**Happy Christmas**
**25th DECEMBER**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. S. Valli** — **05th Dec.**
Fibtec

**Mrs. M. Indumathy** — **06th Dec.**
Purchase

**Mr. S. Purushothaman** — **10th Dec.**
Production

**Mr. Velappan Jeyakummar** — **12th Dec.**
Managing Director

**Best Wishes from Tiaano Employees**

## சிந்தனை கார்னர்

வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்து கொள்கின்றனர். வறுமை காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்து கொள்கிறோம்.

**— அட்டன்காலிஸ்**

ஒருவர் தாம் செய்யும் தவறுகளை ஒப்புக் கொள்வதுதான் அவர்களது உள்ளத் தூய்மையைக் காட்டும்.

**— கோல்டன்**

வேகமாக முடிவெடுக்கக் கூடாது. ஏனென்றால் வேகமான முடிவுகள் உறுதியானவை அல்ல.

**— ரூஸோ**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

மலையின் மடியில் அமர்ந்து கொண்ட குழந்தை மேகங்கள் கேட்டன. “பாட்டி! உன் காடுகளுக்கு நாங்கள் மழை கொண்டு வரட்டுமா?” மலை சொன்னது, “போதிய மழை என் காடுகளுக்குக் கிடைத்துவிட்டது. மனிதர்கள் தான் பாவம்!” ஏதேதோ பிரார்த்தனைகள் செய்கிறார்கள். நீங்கள் அவர்களுக்காகத் தூது சொல்லுங்களேன்!

கொஞ்ச நாள் கழித்துக் குழந்தை மேகங்கள் கவலையுடன் மலையிடம் கூறின. “பாட்டி! நாங்கள் தேவதைகளைத் தொடர்பு கொண்டு மனிதர்களின் பிராத்தனைகள் நிறைவேற வழி செய்துள்ளோம். மனிதர்கள் நம்பிக்கையுடன் ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தால் வேண்டியதை வழங்குவதாய் தேவதைகள் தெரிவித்துள்ளன. மனிதர்களை நம்பிக்கை கொள்ளச் செய்யத்தான் வழி தெரியவில்லை.”

“துளியளவு நம்பிக்கை துளிர்த்தால் போதும்.
மலையளவு நன்மைகள் நமக்குக் காத்திருக்கின்றன”

—கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## கடவுள் நம்முள் இருக்கிறார்

இமய மலையில் ஜென் குரு ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரைக் காண ஒரு மடாலயத்தின் தலைவர் சென்றார். அப்போது அவரிடம் “நான் ஒரு புகழ் பெற்ற மடாலயம் ஒன்றை நடத்தி வருகிறேன்” என்று கூறினார். குருவும் தன் மௌனத்தை கலைக்காமல் அவர் கூறியதை கேட்டு தலை அசைத்தார்.

மேலும், அந்த தலைவர் குருவிடம் “என் மனம் தற்போது பெரும் குழப்பத்தில் உள்ளது. அதற்கான விடையை அறியவே உங்களைக் காண வந்தேன்” என்றும் கூறினார். குரு அதற்கு, “என்ன குழப்பம்?” என்று கேட்டார். அந்த தலைவர் குருவிடம், “என் மடாலயம் மிகவும் அமைதியாக, பழமை நிறைந்த புனிதமான இறை வழிபாட்டை மேற்கொண்டு வந்தது. இதனை அறிந்து உலகின் பல பகுதிகளிலிருந்தும், இளைஞர்கள் வந்து தங்கி, பாடத்தை கற்றுக் கொண்டு செல்வர். ஆனால் இப்போதோ, யாரும் வருவதில்லை. இதற்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. நீங்கள் தான் அதற்கான காரணத்தை சொல்ல வேண்டும்” என்று கூறினார்.

அவ்வாறு வருத்தத்துடன் சொல்லும் போது, அவரது குரலில் வேதனை தெரிந்தது. அதன் பின் குரு தலைவரிடம், “இதற்கு அறியாமை தான் காரணம்” என்று சொன்னார். “அறியாமையா?” என்று கேட்டார் தலைவர். “ஆம், உங்கள் மத்தியில் தேவதூதர் ஒருவர் உள்ளார். அவரை நீங்கள் உணரவில்லை, அதனால் தான் இந்த குழப்பம்” என்று கூறி அனுப்பி வைத்தார்.

அவரும் யாராக இருக்க முடியும் என்று யோசித்துக் கொண்டே சென்றார். பின் தன் மடாலயத்தில் இருக்கும் சீடர்களிடம் நடந்ததை சொன்னார். அவர்களும் யாரோ ஒருவர் தான் இங்கு தேவதூதர் என்பதை நினைத்து, ஒருவரை ஒருவர் மிகவும் மரியாதையுடன் நடத்தினார்கள். பின் சிறிது மாதங்கள் கழித்து, அவரது மடாலயத்தில் கூட்டம் குவிந்தது. ஏனெனில் அவர்கள் இதுவரை எதையும் விரும்பி செய்யாமல், கடமைக்காக செய்ததால், யாரும் வரவில்லை. இப்போது அவர்கள் அனைவருக்கும் மரியாதைக் கொடுத்து, அனைத்தையும்

## தெரிந்து கொள்வோம்

### Half a Loaf is Better than no Bread

We must be grateful for what we have or get, even if it is less than what we desire.

Compiled By : Ms. R. Indumathy
Tiaano Vidyashrm

### உப்பின் பயன்கள்

* பொதுவாக சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அவதிப்படும் ஓர் விஷயம் ஜலதோஷத்தின் போது ஏற்படும் மூக்கடைப்பு இதனால் பேசவும் முடியாத நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் இதை சரி செய்ய உப்பு மருந்தாக விளங்குகிறது. வெண்ணீர் கலந்த உப்பு தண்ணீரை நன்கு வேக வைத்து வெதுவெதுப்பாக இருக்கும் நிலையில் சிறிது உப்பை போட்டு உறிஞ்சவேண்டும். அந்த நீராவி மூக்கினுள் பரவும் அளவுக்கு இருக்க வேண்டும். இதன் மூலம் மூக்கடைப்பு எளிதாக நீங்குவதுடன், ஜலதோஷத்தை கட்டுப்படுத்த முடியும்.
* நெய்யில் ஒரு தேக்கரண்டி உப்பைப் போட்டு சுடவைத்தால் நெய் நீண்ட நாள் கெடாமல் இருக்கும்.
* மண்ணெண்ணெயில் சிறிது உப்பு கலந்து விளக்கு ஏற்றினால் மண்ணெண்ணெய் சீக்கிரம் தீராது.
* அரிசியை நீண்ட நாட்கள் சேமித்து வைக்கும் போது சிறிது உப்புத்தூளையும் கலந்து விட்டால் புழு, பூச்சி வராமல் பாதுகாப்பாக இருக்கும்.
* துருபிடித்த சாமான்கள் மீது உப்பு தேய்ப்பதின் மூலம் துரு நீங்கி பளபளக்கும்.
* வீட்டில் தரை கழுவும் போது, சிறிது உப்பையும் நீரில் கலந்து கழுவினால், காய்ந்த பிறகு தரையில் ஈக்கள் மொய்க்கும் தொல்லையிருக்காது.

Compiled By : Miss. T. Regi
Facilitation

மரியாதையோடு நடத்தினர். இவை அனைத்தையும் கண்ட பிறகு தான் தலைவருக்கு, துறவி சொன்னது புரிந்தது. தேவ தூதர் வேறு எங்கும் இல்லை, அவரவர் மனதில் தான் இருக்கிறார். அதை நாம் உணர்ந்து, நம்மைப் போல மற்றவரையும் நேசித்தால், இறைவனை உணர முடியும் என்பதை அறிந்துக் கொண்டார்.

Compiled By : Mr. K. Manivannan
Marketing

### "வெல்பவர்கள் தளருவதில்லை! தளர்பவர்கள் வெல்வதில்லை!"

ஒரு எறும்புக்கு முன்னால் எந்தத் தடைகளை நீங்கள் வைத்தாலும், அது அடியில் சென்றோ அல்லது மேலால் சென்றோ அல்லது சுற்றி சென்றோ தடைகளை கடக்கும். கவனித்துப் பாருங்கள், தடைகளை உடைப்பதற்கு எறும்புகள் காலத்தை விரையம் செய்து அழியவில்லை.

தடைகளை அங்கேயே விட்டுவிட்டு அவை முன்னேறுகின்றன. எல்லா கஷ்டங்களிலும் எறும்பு தன்னால் முடிந்த எல்லாவற்றையுமே செய்து பார்க்கிறது "வெல்பவர்கள் தளருவதில்லை! தளர்பவர்கள் வெல்வதில்லை!" என்ற கொள்கைக்கு அது ஆதாரமாக இருக்கிறது.

Collected from Internet

### TV EXERCISE

**Abstract**

**Background:** Prolonged television (TV) viewing time is unfavourably associated with mortality outcomes, particularly for cardiovascular disease, but the impact on life expectancy has not been quantified. The authors estimate the extent to which TV viewing time reduces life expectancy in Australia, 2008.

**Methods:** The authors constructed a life table model that incorporates a previously reported mortality risk associated with TV time. Data were from the Australian Bureau of Statistics and the Australian Diabetes, Obesity and Lifestyle Study, a national population – based observational survey that started in 1999 – 2000. The authors modelled impacts of changes in population average TV viewing time on life expectancy at birth.

**Results:** The amount of TV viewed in Australia in 2008 reduced life expectancy at birth by 1.8 years (95% uncertainly interval (UI): 8.4 days to 3.7 years) for men and 1.5 years (95% UI: 6.8 days to 3.1 years) for women. Compared with persons who watch no TV, those who spend a lifetime average of 6 h/day watching TV can expect to live 4.8 years (95% UI: 11 days to 10.4 years) less. On average, every single hour of TV viewed after the age of 25 reduces the viewer's life expectancy by 21.8 (95% UI: 0.3 – 44.7) min. This study is limited by the low precision with which the relationship between TV viewing time and mortality is currently known.

**Conclusions:** TV viewing time may be associated with a loss of time that is comparable to other major chronic disease risk factors such as physical inactivity and obesity.

Compiled By : Mr. M. Siva Kumar
Marketing

## கவிதைகள்

### கிராமம்

அமைதியின் பிறப்பிடம்
உண்மை உறவின்
இறுப்பிடம்
இயற்கையின் சிறப்பிடம்...

### தன்னம்பிக்கை!

நீ விழுந்த போதெல்லாம் தாங்கிப்
பிடிக்கும் இந்தக் கை
மனம் உடையும் போதெல்லாம் தட்டிக்
கொடுக்கும் இந்தக் கை
தனியே நீ அழும்போதெல்லாம் உன்
கண்ணீரைத் துடைக்கும் இந்தக் கை
அது வேறு யார் கையும் அல்ல
உன்னுள் உள்ள உனது தன்னம்பிக்கை
அதை மட்டும் ஒரு போதும் இழந்து
விடாதே!!!!

Compiled By : Mrs. C. Bavani
Administration

### நீ

நீ விடியலை எதிர்நோக்கும் பறவை அல்ல
விடியலை கொடுக்கும் சூரியன்
நீ வானில் இருக்கும் சிறு நட்சத்திரம்
அல்ல
ஒளி கொடுக்கும் நிலா.
நீ வாசம் தரும் மலர் அல்ல
சுவாசம் தரும் காற்று
நீ வற்றிப் போகும் ஆறு அல்ல
என்றும் வற்றாத கடல்
நீ தொடக் கூடிய பொருள் அல்ல
யாரும் தொட முடியாத நெருப்பு
துணிந்து நில் எதையும் வெல்...

Compiled By : Ms. V. Gayathri
Tiaano Vidyashrm

## சிந்தனைக்கு

எண்ணத்தின் வலிமையிலிருந்து பேராற்றல் பிறக்கிறது. நுண்மையாக இருக்கும் அளவிற்கு ஒரு பொருள் ஆற்றல் மிக்கதாகிறது. எண்ணத்தின் ஆற்றல் நெடுந்தொலைவில் இருப்பவர்களின் மீதுகூடத் தாக்கம் செலுத்துகிறது.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XXXV)

### ஒரு கப் செய்டன்

இதுபோன்ற அசட்டு நடவடிக்கைகளில் நேரம் வீணாகிறது என்பதை புரிந்து கொண்டதால்தான், ஒவ்வொரு காபி பாரும், கச்சிதமான மேஜை வரைபடத்தோடு இயங்குகிறது. அங்கிருப்பவர்கள் யாரும், எதையும் மறந்து போய் வேறொரு இடத்தில் வைக்கமாட்டார்கள், வைக்கக்கூடாது. இதனால் எதை எங்கே தேடவேண்டுமோ அங்கே தேடினால் நிச்சயமாகக் கிடைக்கும்!

உதாரணமாக உங்களுடைய கேக்கில் ஒரு துண்டத்தை எனக்குத் தர விரும்புகிறீர்கள். ஆனால், இருப்பது ஒரே ஒரு ஸ்பூன்தான். ஆகவே வெயிட்டரை அழைத்து, 'இன்னொரு ஸ்பூன் ப்ளீஸ்! என்கிறோம்.

உடனே, அவர் திரும்புகிற கோணத்தைக் கவனித்துப் பாருங்கள். ஓரமாக இருக்கும் நீள மேஜையில் எந்த மூலையில் ஸ்பூன்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எப்போதும் அங்கே தான் ஸ்பூன்கள் கிடைக்கும் என்பதும் நிச்சயம். ஆகவே, சரியாக அதே திசையில் திரும்பி நடந்து ஸ்பூனை எடுத்துக்கொண்டு உங்களிடம் திரும்புவார். ஒரு மைக்ரோ விநாடி கூட வீணாகாது.

இதைவிட புத்திசாலித்தனமான சில உத்திகளும் உண்டு. ஸ்பூன், முள் கரண்டி, சர்க்கரைப் பொட்டலங்கள் போன்றவற்றை வாடிக்கையாளர்கள் அடிக்கடி கேட்பார்கள் என்பதால், ஒவ்வொரு மேஜையிலும் இவற்றை கூடுதலாக நிரப்பி வைத்திருப்பார்கள்.

நேரம், இடம் ஆகிய இருவிதங்களிலும் சிக்கனம் பார்க்கவேண்டிய அவசியத்தில் இருக்கும் காபி பார்கள், இது போல் தங்களது கருவிகளை, பொருள்களை, உபகரணங்களைக் கச்சிதமாக அமைத்திருப்பதால்தான், அவர்களால் எந்தப் பிசிறும் இல்லாமல் செயல்பட முடிகிறது. வாடிக்கையாளர்களுக்கும் தாமதமில்லாத உடனடி சேவை கிடைக்கிறது. '5S' – ல் இரண்டாம் படியான 'செய்டன்' வலியுறுத்துவது, இந்த விஷயத்தைத்தான்.

தொடரும்...

## ELECTROLYZER 2.5KPH

